1983 பிப்ரவரி 12]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். விவசாய சங்கத்தினைச் சேர்ந்தவர்கள் அனுமதி இல்லாமல் ஒட்டன்சத்திரத்தில் கட்டிடம் கட்டினார்கள். அதுகுறித்து நோட்டீஸ் கொடுக்கப்பட்டும் அவர்கள் அதை அகற்ற மறுத்தார்கள். கடைசியாக ஓர் இரவிலே அது அகற்றப்பட்டது என்பது நமக்குத் தெரியும். அதேபோன்ற நிலைமையினை இதற்கும் கூட அனுசரிக்கலாம்.

பட்டினிச்சாவு தடுப்பு திட்டத்தின் மூலம் நிவாரணம் பெற்றோர் எண்ணிக்கை

* வினா எண் 250—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டினிச் சாவு தடுப்பு திட்டத்தின் மூலம் 1981 முடிய எத்தனை பேர்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது?

(ஆ) இத்திட்டத்தின் மூலம் எத்தனை பேர் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பயன் அடைந்தார்கள்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) 268 நபர்கள் (1981 டிசம்பர் முடிய) (ஆ) 12 நபர்கள்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலம் நிவாரணம் பெற என்னென்ன நடைமுறைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டு எவ்வளவு பேருக்கு நிவாரணம் வழங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 1980-ஆம் ஆண்டு டிசம்பரிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலமாக ஏழை எளியவர்கள், வாழ வழி ஏதுமின்றி பட்டினியால் மிகவும் வாடும் நிலைமை ஏற்பட்டால் அத்தகையோர் ஊர்நல அலுவலரை அணுகி ரூபாய் 100 உதவித் தொகையாகப் பெறலாம். அத்தகையோர் அவ்வாறு பணம் பெற்ற பின்னர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் வேலைக்கு சேர்த்துக்கொள்ளப்படுவர். வயதானவர்களாக இருந்து முதியோர் உதவித்தொகை பெறத் தகுதி உடையவர்களாக இருந்தால் அவர்களுக்கு அந்த உதவித்தொகையினைப் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நல்ல முறையில் செயலாற்றப்படவேண்டும் என்றால் இதற்கு ஊர் நல அலுவலர்கள மட்டுமல்லாமல் மேலும் தனியாக அலுவலர்களைப் போட்டு அவர்கள் மூலமாக இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இந்தத் திட்டத்தை ஊர்நல அலுவலர்தான் செய்து வருகின்றார்.

திரு. கு. ரமணி: இப்படிப்பட்டதொரு திட்டம், பட்டினிச் சாவு ஏற்பட்டே தீரும் என்றளவிற்கு பட்டினி கிடக்கிறவர்கள் இந்தமாதிரி நிதி பெற்றுக்கொள்ளமுடியும் என்று அநேகமாக பட்டினி கிடக்கக்கூடிய மக்களுக்குத் தெரியாது என்றுதான் நான் கருதுகிறேன். எனவே அதை அப்படிப்பட்டவர்களுக்குத் தெரியபடுத்துவதற்கான முறையில் ஒரு விளம்பரத்தை அல்லது எல்லா ஊர்களிலும், கிராமங்களிலும் உள்ள மக்களுக்கு, இப்படிப் பட்டினி கிடக்கக்கூடியவர்கள் புரிந்து கொள்ளக்கூடிய அளவிற்கு இந்த விஷயத்தைத் தெரியப்படுத்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது? இது தெரியாமல் அவர்கள் கேட்கமுடியாது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இது ஏற்கனவே பல்வேறு நிலைகளில் விளம்பரப்படுத்தப்பட்டு அதன் மூலமாகத்தான் 268 பேர்கள் தமிழகம் முழுவதும் இந்த உதவித் தொகையைப் பெற்றுவருகிறார்கள். இதற்கு இன்னும் அதிகமாக விளம்பரம் கொடுப்பது என்றால் அது தவறாகக் கூட போய்விட முடியும். ஏனென்றால், 100 ரூபாய் எப்படியாவது கிடைக்கிறது என்பதற்காகக்கூட ஒரு சிலர் வேண்டுமென்றே இதற்கான மனுக்களை அனுப்பலாம். அப்படிப்பட்ட நிலைமை உண்டாகாமல் எல்லோருக்கும் வேலைவாய்ப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற நிலை ஏற்படத்தான் இப்போது இந்த அரசாங்கம் பாடுபட்டு வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: ஒருவர் ஊர்நல அலுவலரை அணுகி எனக்கு வேலை இல்லை, பட்டினி கிடக்கிறேன் என்று சொல்லி ஒருமுறை அந்த உதவியைப் பெற்ற பிறகு அவருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவும் அல்லது ஒய்வூதியம் வழங்க முயற்சிக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒய்வூதியம் அல்லது வேலைவாய்ப்பு இல்லையென்றால் இரண்டாவது முறையாக ரூ 100 வழங்க அரசு ஏதாவது ஆணை பிறப்பித்துள்ளதா? ஊராட்சி ஒன்றியங்கள் ஒரு ஆண்டு இவ்வளவு நபர்களுக்குத்தான் வழங்கவேண்டும் என்று அலகேட் செய்யப்பட்டுள்ளதா? இதற்கு அரசாங்கம் தனியாக நிதி அளித்துள்ளதா அல்லது ஒன்றிய நிதியிலிருந்து அளிக்கிறார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இந்தப் பட்டினிச் சாவைத் தடுக்கவேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தை யெல்லாம் கொண்டுவந்து நடைமுறைபடுத்திக்கொண்டிருக் கிறோம். இந்த நூறு ரூபாய் கொடுத்ததற்குப் பின்னால் அறுபது வயதுக்கு கீழ்ப்பட்டவர்களாக இருந்து வேலைக்குச் செல்ல முடிகிறவர்களாகயிருந்தால் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் அவர்கள் எல்லாம் எடுத்துக்கொள்ளப்படுகிறார் கள். ஆகவே மீண்டும் நூறு ரூபாய் அவர்களுக்கு கொடுக்கிற முறை இதுவரை நடமுறைப்படுத்தவில்லை. கேட்பதற்கும் ஆள் இல்லை, அதனால் நடைமுறைப்படுத்தவில்லை. தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் வேலை கொடுக்கிற காரணத்தால் அந்நிலை எழுவதற்கில்லை.

1983 பிப்ரவரி 12]

திரு. தி. கா. நல்லப்பன் : இப்படிப்பட்ட பட்டினிச்சாவுகளைத் தடுக்கும் திட்டம் நல்ல திட்டம்தான். ஆனால் பட்டினியால் சாகிறார்கள் என்பதை எந்த நிலையில் அறிந்து கொள்வது? இரண்டாவதாக. ஊர்நல அலுவலரிடம் அவர்கள் விண்ணப்பிக்கிறபோது அனாதையாக இருந்து, வயோதியராக இருந்து விண்ணப்பித்தால் அவர்களுக்குக் கொடுப்பது சரி, ஆண், பெண இருந்தும் நிராகரிக்கப்பட்டவர்களும் இந்த திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஆதரவற்றவர்களாக இருக்கவேண்டும், வயோதிகராக இருக்கவேண்டும், அவர்கள் உழைக்க முடியாதவர்களாகவும் இருக்கவேண்டும். உழைக்கிறவர் களாக இருந்தாலும் கூட அவர்களுக்கு போதுமான அளவிற்கு, தேவைப்படுகிற அளவிற்கு சாப்பாடு கிடைக்கமுடியாததொரு நிலை இருந்தால் இவைகள் எல்லாம் இந்தப் பட்டினிச் சாவு தடுப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம். குறிப்பாக அவர் களுக்கு குழந்தைகுட்டிகள் எல்லாம் இருந்து பெற்றோர்கள் அல்லது அவர்களுக்கு ஆதரவாளர்கள் எல்லாம் இருந்து நிராகரித்துவிட்டால் அதற்கு சட்டம் இருக்கிறது, வழக்குமன்றம் இருக்கிறது, அவர்கள் மூலமாக நடவடிக்கைகள் எடுக்கலாம்.

திரு இரெ. இராசமாணிக்கம் : ஒருவர் பட்டினியால் சாக யிருக்கிறபோது அவர் இந்த உதவித் தொகை பெறவேண்டு மென்றால் அவர் பட்டினியால் சாக இருக்கிறார் என்பதற்கு யார் அத்தாட்சி கொடுப்பது ? எந்த அடிப்படையில் இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இதெல்லாம் மனிதாபிமான அடிப்படையில்தான் செய்யவேண்டும். பட்டினி யால் சாகப்போகிறார் என்பது நம் கண்களுக்கே தெரியும். இதற்காக தனியாக ஒரு மருத்துவரிடம் அல்லது வேறு ஒருவரிடம் சென்று இதற்காக நற்சான்றிதழ் பெறத் தேவை இல்லை. இவைகளையெல்லாம் நாம் மனிதாபிமான அடிப்படையில் செய்ய வேண்டும்.

எல்லா கிராமங்களிலும் கழிப்பிடங்கள் கட்டும் திட்டம்.

* வினா எண் 251—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு இரண்டு ஆண்டு காலத்திற்குள் எல்லா கிராமங்களிலும் கழிவறைகளை கட்டுவதென தீவிர திட்டத்தை செயல்படுத்த உள்ளதா ?